12.09.2024

**<u>ம.சா.1 திரு.தேவராஜன், த/பெ. இராமானுஜ முதலியார் என்பவரை மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை</u>**

கடைசியாக மடத்திற்கு எப்போது வாடகை கொடுத்துள்ளேன் என்றால் 2006 வரை வாடகை கொடுத்தேன். பிறகு டெபாசிட் செய்தேன். டெபாசிட் செய்வதற்கு நீதிமன்ற உத்தரவு மற்றும் ஆதாரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. தற்போது வந்த மடாதிபதியோடு புதியதாக ஏதேனும் குத்தகை பத்திரம் ஏற்படுத்திக்கொண்டேனா என்றால் இல்லை. அத்திவரதர் வைபவத்தின் போது 4 ஏக்கர் நிலத்தை கார் நிறுத்துவதற்காக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது என்றால் கோவிலுக்காக அதிகாரிகள் ஒப்புதலோடு எடுத்தார்கள், பிறகு எங்களிடமே கொடுத்துவிட்டார்கள். எங்களிடம் திருப்பி கொடுத்ததற்கு ஆவணம் உண்டா என்றால் எடுத்ததற்கும் ஆவணம் இல்லை, கொடுத்ததற்கும் ஆவணம் இல்லை. காஞ்சிபுரம் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.196/2019 ல் 4 ஏக்கர் நிலத்தை அரசாங்கம் அத்திவரதர் வைபவத்தின் போது எடுத்தார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் அவர்கள் அதிகார துஷ்பிரயோகத்தோடு தான் எடுத்தார்கள். நானோ எனது சகோதரனோ குத்தகை பதிவேட்டு அலுவலரிடம் எங்களை பயிரிடும் குத்தகைதாரர்கள் என அறிவிக்க கேட்டு மனு ஏதேனும் கொடுத்து நாங்கள் பயிரிடும் குத்தகைதாரர்களாக

அறிவிக்கப்பட்டுள்ளோமா என்றால் இல்லை. நிலவரி மட்டும் செலுத்தி வருகிறோம். அ.வ.எண்.465/1980 ன் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. அந்த வழக்கை தாக்கல் செய்த போது மடாதிபதியே கிடையாது என்றும் கோவில் நிர்வாக அலுவலர் மீது தான் வழக்கு போடப்பட்டது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

(எதிர்மனுதாரர் வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)